


**15.09.2025**

## 37. ‘என் விசுவாசத்தை’ மறைத்து வைத்திட நான் விரும்பவில்லை!

**நா**ன் அவ்வப்போது ஆலோசனை கேட்கும் தேவ மனிதன் “நீங்கள் சகலத்தையும் கர்த்தருக்கு அர்ப்பணித்ததை நானும் மனப்பூர்வமாய் அங்கீகரிக்கிறேன்! ஆனால், இந்த புதிய கத்தோலிக்க ஆவிக்குரிய முறைமையின் அமைப்பில் நீங்கள் இணைந்திருப்பது ‘உங்களுக்கு உகந்ததாக இருக்காது’ என கருதுகிறேன்!” என்று கூறினார். அவர்களைக் குறித்து ‘ஏதோ சில காரியங்களை’ என்னிடத்தில் குறிப்பிட்டார். மேலும் என்னைக் குறித்து அவர் எச்சரித்தது என்னவென்றால் “நீங்கள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து வரும், புனிதமான சிலுவையின் அந்தரங்க ஜீவியத்தை” இந்த அமைப்பிலுள்ள ஒருவருக்கும் கூறிவிடாதீர்கள்! நீங்கள் அப்படிச் செய்தால், அவர்கள் மூலம் ஏராளமான உபத்திரவங்களை சந்திக்க வேண்டியதாயிருக்கும் என எச்சரித்து சென்றுவிட்டார். ஆனால்! என் உள்ளமோ நான் பாடுகளை அனுபவிப்பதுதான் மேலானது என தேவன் கண்டிருந்தால், எதையும் சூச்சமாய் மறைப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை! என்றே உணர்ந்தேன். எதையும் மறைத்து வைத்திருக்கும் உபாயத்தில் பயன் ஏதும் இல்லை என்பதை உணர்ந்தேன்!

**– ரத்னம்**